DECEMBER 83
NO 1

# விடுதலைக்குரல்

மார்கழி 83
இல 1

# Is Amirthalingam Playing A Double Game?

Appa Pillai Amirthalingam, the Tamil United Liberation Front

Amirthalingam is accused of having effected the killing through LTTE cadres, of Shivashanmuga Murthy, a PLOT activist, a vehement critic of TULF. Amirthalingam and his wife Mangayarakarasi. It is said that Murthy was shot by Tiger activists after he published a poem in which he mentioned that While Tamil Eelam was stinking with corpses, it was using heavy foreign scents.



in Sri / long / coun / Ind / inclu / seem / leade / mino / is mo / charis / It / activi / extre / Sri L / belon / explai / Sinha / consid / the n / they / leader / lingam / never / If th / the I / much / The / Rama / maran / Lanka / head / Jaffna / The / posted / what / told C / since / ssinat / for a s

தமிழீழ விடுதலைப் பொதுக்கூட்டம்.

கடந்த பல்லாண்டு காலமாகத் தமிழீழத்தில் நடந்து வரும் அட்டூழியங்கள் இப்போது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. தமிழீழத்தில் சிங்கள அரசு இழைத்து வரும் கொடுமைகளை உலக நாடுகளுக்கு படம் பிடித்துக்காட்டும் வண்ணம், உலகில் உள்ள வல்லரசு நாடுகளுக்கும், ஏனைய நாடுகளுக்கும் எடுத்துரைத்து வரும் வழியில் பிரான்சுக்கும்

திரு. அமிர்தலிங்கம் அவர்கள்
(த.வி.கூ. செயலாளர்)

வருகை தந்து எடுத்துரைக்க உள்ளார். அதனையொட்டி நடைபெறும் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

பட்டிமன்றம்
"இனியும் இணைந்து வாழலாமா"?

இடம்:- PARDISSE SAINT HIPPOLYTE,
27, AVENUE DE CHOISY, PARIS - 75013.
METRO - PORTE DE CHOISY.
காலம்:- 12-10-1983 (புதன்)
நேரம்:- மாலை 4 மணி.
வாழ்க தமிழ் ஈழம்! [illegible]

(GM / orga / volu / help / requ / ever / fami / mur / Colo / is a / that / Tam / have / appe / worl / bank

இலங்கையில் இராணுவப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாரா? எனக் கேட்கப்பட்டபோது, நாம் எமது இலட்சியத்தை அடையும் வன்செயலை நாட வில்லை. ஆனால் அரசு எம்மை பாராளுமன்றத்திலிருந்து துரத்தி அரசியல் ரீதியான ஜனநாயக வழியை மூடிவிடுவதன் மூலம் தீவிரவாதிகளையே தூண்டிவிடுகிறது. இதற்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும். த. வி. கூ. வன்செயலை ஆதரிப்பதில்லை என கிரு. 'அமிர்' பதிலளிக்கார்.

eir / eir / for / he / not / he / was / of / GM / ent / 000 / iya / it / on / ote / ve

Professor Balasingam, the London-based theoretician of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) told *Onlooker* that his organisation was against "everything that Amirthalingam stood for. He is a CIA stooge who is dead against the formation of Eelam." In fact, Balasingam predicted then that Amirthalingam would be permitted to come out of Sri Lanka by Jayewardene simply because the TULF

## The Tigers Tried To Kill Me

AMIRTHALINGAM

'தீர்வுக்கான பாதை இலகுவானது என நான் நினைக்கிறேன். திருமதி இந்திரா காந்தியின் தூதுவரின் ஆலோசனையை ஜனாதிபதி ஏற்க வேண்டும். நாம் எமது கோரிக்கைகளைக் கைவிட்ட பின்தான் பேச்சுவார்த்தை என்ற நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். நல்ல நோக்குடன் எம் மத்தியில் சமரசம் செய்ய முன்வந்துள்ள மூன்றாவது கட்சியை இப்போது நாம் ஏற்றுக்கொள்கிறோம். பிரச்சினையை சமாதானமான முறையில் தீர்க்கும் சந்தர்ப்பங்களை இது விருத்திசெய்யலாம்.

தமிழ் மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படுவதை எதிர்க்கும் தீவிரவாதிகள் ஜனாதிபதி சார்ந்துள்ள கட்சியில் இருப்பதால் ஏற்படும் பிரச்சினைபற்றி கேட்கப்பட்டபோது ஜனாதிபதி விரும்பினால் அச்சக்திகளை அவரால் கட்டுப்படுத்தலாம். இச்சக்திகள் அவரால் உருவாக்கப்பட்டவையே. எவ்வு ஜனாதிபதி விரும்பினால் தீர்வு ஒன்றினைக்காணமுடியும் என நான் நம்புகிறேன்' என திரு அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

der wou / phatic d / gers are / ting for / by Pr / ief, is / rces sa / sent. It / d the p / k the ot

முகப்பு அட்டை

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம். அ. அமிர்தலிங்கம் ON LOOKER (22.9.83) என்ற பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியின் சில பகுதிகளும், அவரது அரசியலைப் பற்றி அந்தப் பத்திரிகை எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகளும், வீரகேசரி பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த அவரது B.B.C வானொலிப் பேட்டியின் தலைப்பு தரும் செய்திகளும் முகப்பு அட்டையில் அச்சாகியிருக்கின்றன:

IS AMIRTHALINGAM PLAYING A DOUBLE GAME.

என்ற தலைப்பிலமைந்த ON LOOKER கட்டுரை.

தமிழீழம் பிணங்களால் நாறிக் கொண்டிருக்கும் போது அது வெளிநாட்டு வாசனைத் திரவியங்களைப் பாவிக்கின்றது என்று ஒரு கவிதையில் குறிப்பிட்டு பிரசுரித்துள்ளனர், தமிழர் விடுதலைக் கூட்டணியையும், அமிர்தலிங்கம் அவரது மனைவி மங்கையர்க்கரசி ஆகியோரையும் கடுமையாக விமர்சித்த [illegible]மூர்த்தி புலி இயக்கத்தினால் சுட்டுக் கொலைப் பட்டார்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையாளர் லண்டன் பேராசிரியர் பாலசிங்கம் தமிழீழம் உருவாகுவதற்கு பெரும் எதிர்ப்பாக இருக்கும் அமிர்தலிங்கம் ஒரு C.I.A கையாள் என்றும் தனது இயக்கம் அவரது எல்லா நடவடிக்கைகளுக்கும் எதிரானது என்றும் தெரிவித்திருக்கின்றனர்

# விடுதலைக்குரல்

"சாற்றும் கவி கலைகள் யாவும்
தமிழீழப் போராட்டத்தை
முன்னெடுக்கும் ஏவுகணைகளாகட்டும்"

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டங்கள் உச்சக்கட்ட நிலையை அடைந்து வரும் இந்த நாட்களில், அப்போராட்டங்களுக்கு தலைமை கொடுக்கும் இயக்கத்திற்கோ, அல்லது ஒரு அரசியல் கட்சிக்கோ, அப்போராட்ட சக்திகளை ஒழுங்கமைப்பதற்கும், அம்மக்கள் இயக்கத்தின் கருத்துகளையோ, செயல்திட்டங்களையோ மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும், ஒரு இணைப்புப் பாலமாக அமைவது பத்திரிகை. அத்தோடு "துடிப்புள்ள அரசியல் வேலையைத் துவக்க முடிவதற்கு உயிர்ப்புள்ள அரசியல் கிளர்ச்சி ஒன்றே வழியாகும்." அடிக்கடி வெளியிடப்படும், ஒழுங்காக வெளியிடப்படும் வரக்கூடிய ஓர் பத்திரிகை இல்லையேல் இது அறவே சாத்தியமில்லை. இப்படியான முறையில் தமிழ்மக்களின் கருத்துக்களையும் சிந்தனைகளையும் சுமந்த வண்ணம், அவர்களை ஒரு ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டி போராட்ட சக்தியாக உருவெடுக்கவும், ஒரு பத்திரிகை விடுதலை இயக்கத்திற்கு இன்றியமையாதது. இந்த வகையில் தமிழ்மக்கள் விடுதலை கழகத்திற்கும் மக்களுக்குமிடையில் ஒரு இணைப்புப்பாலமாக "புதிய பாதை" இதழ் விளங்கியது.

அப்பத்திரிகையின் ஆசிரியரும் தோழருமான சுந்தரம் புதியபாதை இதழின் மூலம், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அ. அமிர்தலிங்கம் போன்றோரின் பிற்போக்குத் தலைமைகளை எதிர்த்து தனிமைப்படுத்தியதன் மூலம் போராட்ட சக்திகளை ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டினார். இதனால் வெகுண்டு எழுந்த பிற்போக்குத்தலைமை அவரது கொலைக்கு காரணமாகியது. ஒரு இயக்கத்தின் முன்னணித் தோழரை படுகொலை செய்ததின் மூலம் அவ்வியக்கத்தையோ, அவ்வியக்கத்தின் கருத்துக்களையோ அழித்தொழித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் மண் விழுந்து அதற்கு மாறாக அவ்வியக்கம் இன்று

புதிய உத்வேகத்துடன் ஒரு மக்கள் இயக்கமாக வளர்ந்து வருகின்றது. இம்மக்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு வலுவேற்றும் நோக்கத்துடன் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் ஜேர்மன் கிளையினர், கழகத்தின் ஐரோப்பிய வெளியீடாக "விடுதலைக்குரல்" என்னும் தலைப்புடன் இவ்விதழை வெளியிடுகின்றோம். "புதியபாதை" இதழ் மூலம் தோழர் சுந்தரம் எந்த ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளுக்கெதிராகப் போராடினாரோ, அந்தச் சக்திகளுக்கெதிராக "விடுதலைக்குரல்" தனது பயணத்தின் முதலாவது இதழின் மூலம் முதலாவது அடியை எடுத்து வைக்கின்றது. இப்பிற்போக்கு சக்திகளை தமிழ்மக்கள் மத்தியில் இருந்து அப்புறப்படுத்தி தனிமைப்படுத்துவதின் மூலமே சரியான போராட்ட சக்திகளை ஒருங்கமைத்து ஒன்றுபடுத்தும் கழகத்தின் பணியில் "விடுதலைக்குரல்" தனது பங்கை செலுத்துகின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுப்பதுடன், ஏகாதிபத்தியங்களால் உலகமெங்கிலும் அடக்கியொடுக்கப்படும் மக்களுக்காகவும், விடுதலை இயக்கங்களுக்காகவும் குரல் கொடுப்பதன் மூலம் "விடுதலைக்குரல்" தன்னை சர்வதேச தொழிலாளர் வர்க்கத்துடன் இணைத்துக்கொள்கின்றது. இவ்விடுதலைக்குரலின் பயணத்திற்கு தமிழ்மக்கள் தங்கள் ஆதரவுகளை நல்குவதோடு இவ்விடுதலைக் குரலை விமர்சித்து ஒரு ஆக்கபூர்வமான மார்க்சிச-லெனினிச தத்துவார்த்த இதழாக வெளிக்கொணர முயற்சிக்கும்படி தோழமையுடன் வேண்டுகின்றோம்.

# தமிழீழமும் முஜிபுர்ரகுமானும்

முன்னாள் எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலாளருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் சமீபத்தில் நோர்வே, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, மேற்கு ஜேர்மனி, பிரான்சு ஆகிய ஆறு நாடுகளுக்கும் தமிழீழப்பிரச்சாரம் செய்வதற்காக வருகை தந்திருந்தார். இனி என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியிருந்த பிரான்சு, ஜேர்மனிவாழ் தமிழ்மக்கள் முன்னிலையில் அவர் சொற்பொழிவாற்றினார். உலக ஏகாதிபத்தியத்தின் கண்களில் தமிழ்மக்களின் அங்கீகரிக்கப்பட்ட ஏகாதிபத்திய சார்பின் தலைவரான திருவாளர் அ. அமிர்தலிங்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் அத்தனைக்கும் சரியான அர்த்தம் கண்டறிந்து, மாற்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது, தமிழீழ விடுதலைப் போராட்டம் திசை திரும்பி ஏகாதிபத்தியங்களிடம் சரணாகதியாகாமல் தடுப்பதற்கு அத்தியாவசியமாகும். கடந்த கால வாய்ப்பந்தல் தாலாட்டுக்களால் தமிழினம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது அரங்கேறிய அரசியல் நாடகங்கள் போல் இனிமேலும் அரங்கேற அனுமதிக்காமல், ஒவ்வொரு தாலாட்டிற்கும் சரியான அர்த்தம் தமிழினத்தின் முன் வைக்கப்படவேண்டியது, விடுதலைப்போராட்டத்தின் வெற்றிக்கு மிக அவசியமாகும். இது தவிர்க்கமுடியாத அரசியல் கடமையானமையால் ஒலிப்பதிவு நாடாக்களில் ஜேர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளில் பதிவு செய்யப்பட்ட திருவாளர் அ. அமிர்தலிங்கத்தின் உரை இங்கே திறனாய்வு செய்யப்படுகின்றது. மேற்கு ஜேர்மனியில் உள்ள NOISE என்னும் இடத்தில் தனது உரையை பின்வருமாறு ஆரம்பிக்கின்றார்.

"எங்களுடைய இளைஞர் சிலர் கேட்கலாம் நாம் எல்லாம் ஆயுதம் எடுத்து போராடினால் எங்களுடைய சுதந்திரத்தை நாம் பெற்றுவிட முடியாதா என்று கேட்கலாம். இலங்கையிலே நாம் மொத்தம் 25 லட்சம்பேர். அவர்கள் 1 கோடியே 10 லட்சம்பேர், நாம் ஆயுதம் எடுத்துப் போராடலாம் ஆனால் 25 லட்சம்பேர் போராடி 1 கோடியே 10 லட்சம் பேரை வெற்றிகொள்ளலாம் என்று நாம் நினைக்கக்கூடாது" என்று தொடர்கின்றார்.

என்ன காரணத்தினால் தமிழர்கள் தமிழீழம் கேட்கும் நிலைக்கு இலங்கையின் இருதேசிய இனங்களின் உறவும் பாதிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டம் யாருக்கு எதிராக நடத்தப்படுகின்றது? யார் இரு தேசிய இனங்களுக்குமிடையில் தீர்க்கமுடியாத

பிரச்சினைகளை தோற்றுவித்தவர்கள்? போராடி வெல்லப்போகும் தமிழீழமானது உலக அரசியலில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்? என்ற கேள்விகளை வட்டுக் கோட்டை தீர்மானத்தில் தமிழீழம் ஒன்றுதான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு என்ற முடிவு எடுத்த காலத்தில் ஆராய்ந்து, அதற்கான விளக்கங்களை தமிழ்மக்கள் முன்னர் தெளிவாக்காமல், வட்டுக்கோட்டை தீர்மானம் எடுக்கப்பட்டு 10 வருடங்கள் எப்படி எப்படியோ கழிந்தபின்னர், இன்று முழுச்சிங்களமக்களும், முழுத்தமிழ்மக்களும் சண்டை பிடிப்பதுதான் ஆயுதப்போராட்டம் என்ற படுபிற்போக்குத்தனமான வகுப்புவாத அரசியல் விஞ்ஞானத்தை சொல்கின்றார்.

இலங்கையின் முதல் பிரதமர் D.S. சேனநாயக்கா தொடங்கி S.W.R.D-பண்டாரநாயக்கா தொடர்ந்து இன்றுவரை அனைத்து சிங்கள பாராளுமன்ற அரசியல் வாதிகளாலும் பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுவதற்காக பேசப்பட்ட இனவாதம் தமிழ்-சிங்கள தேசிய இனங்களின் உறவை மோசமாக பாதித்தது. ஏகாதிபத்திய சார்பான படுபிற்போக்குத்தனமான பொருளாதாரக் கொள்கையால் காலத்திற்கு காலம் ஏற்படும் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காணமுடியாமல் கட்டவிழ்த்து விடப்படுவதே இனக்கலவரம் என்பதும், முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையால் ஏற்படும் வேலையில்லாத்திண்டாட்டம், பணவீக்கம் போன்ற தீர்க்க முடியாத பிரச்சினைகளின் நெருக்கடிகளால் புரட்சிக்கு தயாராகும் சிங்கள மக்களின் புரட்சியுணர்வுகளை மழுங்கடித்து சமாதானப்படுத்த ஏற்படுத்தபட்டதுதான் தமிழ்மாணவர்களின் புரட்சிக்கு முதல் காலாக இருந்த தரப்படுத்துதல் என்பதும் சிங்கள குடியேற்றத்திட்டங்கள் என்பதும், இப்படியாக தொடர்ந்த சிங்கள பேரினவாதிகளின் அடக்குமுறைகளால் சிதைக்கப்பட்ட இருதேசிய இனங்களின் உறவும் இனிமேலும் சேர்ந்து வாழமுடியாத நிலையை உருவாக்கியது.

சிங்கள பேரினவாதிகளுக்கு சளைக்காமல் திருவாளர் அ. அமிர்தலிங்கம் போன்றவர்களின் புகழ்பெற்ற சிங்களவன் இரத்தத்தை குடிப்போம் போன்ற பேச்சுகளும் இந்த நிலைக்கு ஓரளவாவது துணைநின்றது. அடக்குமுறையின் உச்சக்கட்டத்தில் தமிழ்மக்களின் புரட்சி உணர்வுகள் தமிழீழமாக உருவெடுத்தது. இந்த நிலையை உருவாக்கியவர்கள் சிங்கள பேரினவாத ஏகாதிபத்திய சார்பு சக்திகளும், உலக ஏகாதிபத்தியமும் உலக ஏகாதிபத்தியத்திற்கு துணைநின்ற தமிழ் அரசியல்வாதிகளுமேயாவார். இவர்களே தமிழ்மக்களின் எதிரிகளும் இவர்களுக்கு எதிரானதே தமிழ்மக்களின் போராட்டமும் ஆகும்.

ஆனால் தமிழீழம் காண வெளிக்கிட்டு 14 வருடங்கள் எப்படி எப்படியோ கழித்தபின்னர் இன்று முழுத்தமிழ் மக்களும், முழுச்சிங்கள மக்களும் சண்டை பிடிப்பதுதான் ஆயுதப் போராட்டம் என்ற நாலாம் தர அரசியலைப்பேசி தமிழீழப் போராட்டத்தை சந்தைச் சண்டையாக்குகின்றாரா? திரு. அ. அமிர்தலிங்கம்.

தொடர்ந்து பேசுகையில் :- "I.R.A 58 வருடங்களாகவும் P.L.O 36 வருடங்களாகவும் மிக வீராவேசமாக போராடியும் வல்லரசுப் போட்டியினால் விடுதலையைக் காணமுடியவில்லை என்றும் பங்களாதேஷ் இரண்டொரு வருடங்களில் இந்தியாவின் உடனடி உதவியுடன் விடுதலையைப் பெற்றுவிட்டதென்றும், எமக்கு வல்லரசுப்போட்டி ஏற்படாது என்று தான் நினைப்பதாகவும்" தான் கூறுகின்றார்.

அயர்லாந்தும் பாலஸ்தீனமும் பூகோள ரீதியில் உலக ஏகாதிபத்தியத்திற்கு எவ்வளவு முக்கியமானவையோ அதிலும் கூடிய முக்கியத்துவத்தில் இருக்கின்றது திருகோணமலைத்துறைமுகம். பங்களாதேஷ் என்ற நாடு உருவானது ஏகாதிபத்தியத்திற்கு பெரிய இழப்பு ஒன்றையும் உருவாக்கவில்லை. மாறாக உலக ஏகாதிபத்தியத்திற்கு பின்வரும் நன்மைகளை உருவாக்கியது:-

1. இந்திய உபகண்டத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்ததால் அதை இன்று அமெரிக்கா தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு இந்தியாவிற்கு எதிரான யுத்த நிலைமையை எப்பொழுதும் ஏற்படுத்திக் கொண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களது மொத்த தேசிய வருமானத்தில் பெரும்பகுதியை பாதுகாப்பு செலவுகளாக செலவிடுவதால், மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு இந்த இரு நாடுகளிலும் வறுமை தலைவிரித்தாடுகின்றது. இதேபோல் மீண்டும் ஒருமுறை பாகிஸ்தான் இரண்டாவதால், பங்களாதேசில் ஏகாதிபத்தியத்திற்கு சார்பான அரசியல் சதிகளை செய்யக்கூடியதாக இருக்கின்றது. இந்திய உபகண்டமானது மூன்றாகப்பிரிந்திருப்பதால் ஏகாதிபத்திய எதிர்ப்பை ஒருங்கே காட்டமுடியாதவாறு சிதறடிக்கப்பட்டிருப்பதோடு ஏதோ ஒரு நாட்டில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது.

2. கிழக்கு பாகிஸ்தான் பிரிவதற்கு முன்னால் நடந்து முடிந்த தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்ற முஜிபுர் ரகுமான் தலைமையிலான பாராளுமன்ற ஜனநாயகவாதிகளின் கைகளில் அதிகாரம் கையளிக்கப்படுவதால், நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் ஏகாதிபத்திய சார்பு சக்திகளின் கைகளிலேயே விட்டுவைக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்தும் முதலாளித்துவ சமூக அமைப்பு நாடுகளின் விற்கமுடியாத

பொருள்களின் புதிய சந்தை ஏற்படுகின்றது. முதலாளித்துவத்தின் சுரண்டல் தொடர்கின்றது. உலகெங்கும் மக்களை அடக்கியொடுக்க பொலிசுக்கும் இராணுவத்திற்கும் ஆயுதங்களை விற்றே முறிந்து விழும் பொருளாதார அமைப்பிற்கு முட்டுவைத்திருக்கும் உலக ஏகாதிபத்தியம் கடனாகத்தானும் தனது இராணுவ தளபாடங்களை விற்று ஒரு புதிய ஆயுத சந்தையை ஏற்படுத்தியது. இந்த ஏாதகமான காரணங்கள் தான் சுகமாக பங்களாதேஷ் இந்தியாவின் உடனடி உதவியுடன் விடுதலையானது. ஆனால் தமிழீழம் பங்களாதேஷ் பாணியில் உருவாகுவதை உலக ஏகாதிபத்தியம் ஒரு போதும் அனுமதிக்காது. இந்திய-இராணுவம் இலங்கையில் கால் வைத்தால் நாட்டுப்பாதுகாப்பு என்ற போர்வையில் இலங்கைத்தீவில் அமெரிக்கத் துருப்புகள் J.R. ஜெயவர்த்தனாவால் அனுமதிக்கப்படலாம். நடுநிலைமை நாடான இந்தியா ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடென்பதால் இந்தியாவுடன் போருக்கான நிலையில் பாகிஸ்தானை அமெரிக்க அரசு இராணுவ தளவாடங்களை வழங்கி தயாராக வைத்திருக்கின்றது. இந்து சமுத்திரத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட இந்தியாவுடன் போரை நடத்த தயார் நிலையில் எப்போதும் அமெரிக்க இராணுவமானது இருக்கின்றது. இந்திய - பாகிஸ்தான் எல்லையில் தொடர்ந்த நெருக்கடியில் இலங்கையில் இலங்கை இராணுவத்துடனும் அமெரிக்காவுடனும் போரை நடத்த இந்தியா எவ்வளவு தூரம் தயாராக இருக்கின்றது, என்பதை எல்லாம் ஆராயாமல் எழுந்தமானத்தில் இந்திய இராணுவத்தின் உதவியுடன் பங்களாதேஷ் மொடலில் தமிழீழம் பெறலாம் என்ற கதையை அமிர்தலிங்கம் சொல்கின்றார்.

உலகம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு உலக ஏகாதிபத்தியம் பகல் கனவு கண்டு கொண்டிருக்கையில் உலகத்திலேயே இராணுவ ரீதியில் முக்கியமான துறைமுகங்கள் சிலவற்றில் ஒன்றானதும், இந்து சமுத்திரப் பிரதேசம் முழுவதையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக்கூடிய கேந்திர நிலையமான திருகோணமலையை இழந்து விடுவதற்கு ஏகாதிபத்தியம் அவ்வளவு சுலபமாக சம்மதிக்காது. டியேகோ கார்சியாவில் (DIECO GARCIA) கால் வைத்து திருகோணமலையில் தலைவைக்க அமெரிக்காவின் ஆரம்ப சடங்குகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. இனப்படுகொலையின் உச்சகட்டத்தில் இந்தியாவின் OPERATION COLOMBO* என்ற இராணுவ நடவடிக்கை (கொழும்பில் அகதிகளான தமிழர்களை வடக்கு கிழக்கிற்கு கொண்டு வருவது) தொடங்குமுன்னர் அலறிப்புடைத்துக்கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத் திட்டமும் அதன் செல்வப்

பிள்ளைகளான பாகிஸ்தான், தென் கொரியா, சிங்கப்பூர், தைவான் ஆகிய நாடுகளிடம் J.R உதவி கேட்டு தம்பியாரை அனுப்பிவைத்த பின்னர், கடுநாயக்கா விமான நிலையத்தை பாதுகாக்க லண்டனில் இருந்து விசேட பாதுகாப்பு அதிகாரிகள் வருவிக்கப்பட்ட பின்னர் J.R ன் மெய்ப்பாதுகாவலராக லண்டனில் இருந்து வந்த ஒருவர் கடமைபுரிந்து கொண்டிருக்கையில் தமிழீழப் போராட்டமானது வல்லரசுகளின் இடையூறு இல்லாமல் நடத்தப்படலாம் என்கின்றார். பங்களாதேஷ் பாணியில் இந்தியாவின் இராணுவத்தால் பெற்றுக்கொள்ள முடியும் என்கின்றார்.

தமிழீழப் போராட்டத்தை உருவாக்கியது உலக ஏகாதிபத்தியம் என்பதும் அதற்கெதிரான அப்போராட்டத்தில் தமிழ்மக்கள் பக்கத்தில் நிற்கப்போவது உலக சோசலிச சக்திகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் என்பதையும், அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பு காரியதரிசியான காஸ்பர் வைன் பேர்க்கர் (CASPAR WEINBERGER) இரகசியமாக J.R. ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதும், இலங்கையின் இனப்படுகொலையின் போது இந்தியா நடந்து கொண்ட விதம் சரியானது என்று சோவியத்தூதரக அதிகாரிகளும், சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் ம் அறிவித்திருப்பதும் தெளிவாக விளக்குகின்றது.

அமிர்தலிங்கம் சொல்வதுபோல் இந்திய இராணுவத்தின் உதவியுடன் பங்களாதேஷ் போன்ற தமிழீழம் காணலாம் என்பதை ஒரு கதைக்கு எடுத்துக் கொண்டாலும் கூட பங்களாதேஷ் மக்களின் இன்றைய நிலை என்ன? நாடு கிடைத்தவுடன் ஏகாதிபத்தியத்துடனான பொருளாதார தொடர்புகளைத் துண்டித்து, மக்கள் சக்தியை திரட்டி சோசலிச வேலைத்திட்டங்களை முன்வைக்காமல், ஏகாதிபத்தியங்களின் செல்லப்பிள்ளையாகி முஜிபுர் ரகுமான் கொல்லப்பட்டதும், நேற்றுவரை அங்கே இராணுவ சதி அரங்கேறியதும் இன்று வரை உலகநாடுகளிடம் பிச்சைப்பெட்டி ஏந்தி சோறுதின்பதும் தான் பங்களாதேஷ் மக்கள் சுதந்தரத்தின் பின்னர் அனுபவிப்பது. பங்களாதேஷ் விடுதலைப் போராட்ட காலத்தில் மார்க்சிச லெனினிச சித்தாந்த தெளிவுடைய ஒரு பாட்டாளிவர்க்க அரசியற்கட்சி அங்கிருந்திருக்குமாயின், விடுதலையை உலக ஏகாதிபத்தியங்களுடன் போராடி எய்வதில் காலம் கடந்திருந்தாலும் நிச்சயமாக பங்களாதேசின் உற்பத்திமுறை மாற்றியமைக்கப்பட்டு உலக சோசலிச சக்திகளின் உதவியுடன் ஒரு வறுமையற்ற சமுதாய அமைப்பு உருவாகி இருக்கும். தமிழீழப் போராட்டமும் தமிழ் மக்களினால் உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முன்னெடுத்து செல்லப்பட்டு

தமிழீழ விடுதலையானது இந்திய உபகண்டத்தின் புரட்சி விசையை முடுக்கி விடப்பட வேண்டியதொன்றே தவிர அமிர்தலிங்கம் நினைப்பதுபோல் காதும் காதும் வைத்தால்போல் நடத்தப்பட முடியாது. மிகவும் தந்திரமாக அவரால் அரங்கேற்றப்பட்ட தேசிய இராணுவ நாடகத்தை பின்வருமாறு முன்னரே அவர் அறிவிக்கின்றார்:—

"வங்காளதேசம் விடுதலை அடைந்தவுடன் அவர்களுடைய சொந்த இராணுவம் முக்திபாகினியின்படை இந்திய இராணுவம் வெளியேற அந்த நாட்டை பாதுகாக்கும் பணியை வங்காள மக்களினுடை இராணுவம் மேற்கொண்டது. அதே போன்ற ஒரு நிலையை நாம் ஏற்படுத்தவேண்டும், அதைத்தான் நான் தீவிரவாத இளைஞர்களுக்கு எடுத்துக்கூறிப்பார்க்கின்றேன். அவர்களுக்கு நான் அதைத்தான் கூறுகின்றேன். இன்றைக்கு நாம் ஒருவரை ஒருவர் சுட்டு அழிக்கின்ற இயக்கங்களாக இருப்பதைக்கைவிட்டு எங்களுடைய தீவிரவாத இளைஞர்களும் ஒற்றுமையாக, அதே நேரத்தில் எங்களைத்தாக்கி எங்களோடு மோதுகின்ற இயக்கங்களாக இல்லாமல், எமக்கு அனுசரணையாக, எமக்கு உதவியாக எப்படி முஜிபுர் ரகுமானுடைய அவாமிலீக்கிற்கு முக்திபாகினி உதவியாக இருந்ததோ அதைப்போன்ற நிலையில் மாற்றியமைக்க வேண்டும், என்பதை நாம் அவர்களிடம் கேட்டு கொண்டு வருகின்றோம். ஆனால் அது சாத்தியப்படாவிட்டால் வேறு ஒழுங்குகள் நாமாகச் செய்ய வேண்டி வரும். விபரமாக இந்த விடயத்தை நான் உங்களிற்கு எடுத்துக் கூற விரும்பவில்லை. நான் எதைப்பற்றி பேசுகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்."....

தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் எல்லாம் ஒற்றுமையாக தனது தலைமையில் போராட்டத்தை முன்னெடுக்க வருமாறு இப்போது அழைப்பு விடுவிக்கும் இவர் 72 தேர்தல் முடிந்த பின்னர் இளைஞர்க்கிடையில் இத்தனை கருத்து மோதல்கள் இல்லாமல் ஒரே அணியில் இவரது தலைமையை ஏற்று என்ன செய்வது என்று போருக்கு தயாராக இருந்தபோது இவர் ஏன் தேசிய இராணுவத்தை அமைக்கவில்லை. தேர்தல் மேடைகளில் பழம் பழுத்தால் என்ன வரும்? வௌவால் வரும். வௌவால் என்ன கொண்டுவரும்? காலில் துவக்கு கட்டிக்கொண்டுவரும் என்று, இவரது இளைஞர் தலைவர்கள் பேசி மக்களை விசரர்களாக்கிய போது ஏன் தேசிய இராணுவ யோசனை வரவில்லை?

ஒரு காலத்தில் புரட்சி எண்ணம் கொண்ட இளைஞர்களை தன்வசப்படுத்தி தனதும், தனது வர்க்க தேவைகளையும்

நிறைவேற்றிக்கொண்டிருந்தபோது இவருடன் வர்க்கங்கள் சமரசமாக இயங்க முடியாது என்று உண்மையினால் வெளியேறியவர்களும் U.N.P. யுடன் கொண்டாட மனமில்லாமல் வெளியேறியவர்களும்தான் இன்று அத்தனை விடுதலை இயக்கங்களையும் வழிநடத்துபவர்கள்.

தமிழர் விடுதலைக்கூட்டணி மட்டும்தான் தமிழ்மக்களின் விடிவுக்கான அரசியல் ஸ்தாபனம் என்று, தமிழ் இளைஞர்களும் தமிழினமும் நம்பிக்கொண்டிருக்கையில், அந்த உணர்வுகளை U.N.P க்கும் உலக ஏகாதிபத்தியத்திற்கும் காட்டிக்கொடுத்ததுடன், தமிழ்மக்களுக்கு அரசியல் கல்வியை அமெரிக்கன் பாணியில் கற்பிக்க முயன்றபோது, மக்களின் விடுதலை வேட்கையால் வெடித்து கிளம்பியவைகள்தான் இந்த விடுதலை இயக்கங்கள். இந்த இயக்கங்கள் ஒன்றைத்தன்னும் முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமையால், தனக்கு பின்னால் ஒரு ஆயுதப்போராட்டத்தில் பங்குபற்றும் இயக்கம் ஒன்றும் இல்லையே என்று தமிழ்மக்கள் தன்னை நிராகரித்து விடுவார்களோ என்ற பயத்தினால் அமிர்தலிங்கத்தின் அபார மூளையில் தோன்றியதுதான் தேசிய இராணுவம். இந்த தேசிய இராணுவம் என்ற எண்ணக்கரு தமிழீழப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கோ என்பது தமிழ்மக்களால் தீவிரமாக சிந்திக்கப்படவேண்டிய தொன்றாகும்.

சாத்வீகப் போராட்டம் செய்கின்றேன் என்று சொல்லித்திரிந்த காலத்திலேயே அமிர்தலிங்கம் தனதும் தனது வர்க்க நலனைப்பாதுகாக்கவும் செய்த சதிகள் எத்தனை?

(1) தமிழரசுக்கட்சியின் மூளை என்ற வ. நவரத்தினத்தை அடையாள அட்டை மசோதாவை எதிர்த்து வாக்களித்தார் என்பதற்காக கட்சியை விட்டு விலக்கி அரசியல் விலாசமில்லாமல் பண்ணியது.

(2) இராசதுரைக்கு அணு அணுவாக பிரச்சனைகள் கொடுத்து U.N.P வலையில் வசமாகமாட்டப்பண்ணியது. அப்படி மாட்டினால் அவரின் துரோகத்திற்கு நல்ல பரிசு கிடைக்கும் என்று இராசதந்திரத்தைப்பாவித்து இவர்களிருவருக்கும் இடையிலான தீராத பகையை தீர்க்க முயற்சித்தது.

(3) புரட்சிகர எண்ணம்கொண்ட இளைஞர்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த யாழ்ப்பாண எம்.பி. யோகேஸ்வரனை, THE FINANCE COMPANY ஐ திறக்க வந்த வர்த்தக அமைச்சர் அத்துலத் முதலிக்கு மாலைபோடப்பண்ணி இளைஞர்களுடன் இணைந்து போகக் கூடிய நிலையிலிருந்த யோகேஸ்வரனை இளைஞர்களிடமிருந்து

பிரித்து வைத்தது. பின்னர் புத்தரின் புனித சின்னமடங்கிய பேழையை தலையில் தூக்கி பவனிவரப்பண்ணி யோகேஸ்வரனை நிரந்தர அரசியல் அனாதை ஆக்கியது.

(4) புதிய பாதையைக் கண்டுபிடித்த சுந்தரத்தை கட்டுப்படுத்த முயற்சித்தது. மேடையில் புதிய பாதையை நிறுத்துவேன் என சவால் விட்டது. பின்னர் சுந்தரம் சுடப்பட்டது.

(5) தேவசேகரம் குலசேகரம், தமிழீழ விடுதலை இராணுவத்தின் தலைமைத்-தோழர், அமிர்தலிங்கத்தின் அரசியற் போக்கை கடுமையாக விமர்சித்து சிராவஸ்தியில் தமிழீழம் காண்கின்றார் என்று துண்டுப்பிரசுரங்கள் பல வெளியிட்டார் இப்போது அவர் உயிருடன் இல்லை.

(6) 81ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி தேர்தல் பிரசாரத்தை நடத்த உதவில் எம்.பி தர்மலிங்கத்தின் ஜீப் வண்டியில் அமிர்தலிங்கமும் சென்றபோது, வண்டியை மறித்து மாவட்ட அபிவிருத்தி சபையை பகிஷ்கரிக்கும்படி கேட்டு விவாதித்து பலனளிக்காத பட்சத்தில் ஜீப்வண்டியை எரித்து தங்கள் எதிர்ப்பை காட்டிய T.E.L.O வின் குட்டிமணி, தங்கத்துரை இன்று எங்கே?

அமிர்தலிங்கத்தின் சாத்வீக அரசியல் அவரது அரசியல் எதிரிகளுக்கு இத்தனை அழிவுகளைத் தோற்றுவிக்குமாயிருந்தால் அவரது தேசிய இராணுவம் தமிழ் ஈழத்தின் அவருக்கெதிரான புரட்சிச்சக்திகளுக்கு ஒரு சவாலேயொழிய தமிழீழம் காண்பதற்கல்ல. தேசிய இராணுவம் என்பது ஒரு செப்படி வித்தையாக மக்களைத்-திசை திருப்புவதாக இருந்தாலும் கூட அந்த எண்ணம் கருவானது. தனது வர்க்க நலனைப்பாதுகாப்பதற்காக முடிந்தால் அவர் எதையும் செய்வார் என்பதை தெளிவாக்குகின்றது.

தொடரும் அவரது உரையில் (பிரான்சு நகரத்தில்):-

"இங்கு ஒரு தம்பி கேள்வி எழுதி அனுப்பியிருக்கின்றார், சோசலிச நாடுகள் எல்லாம் இருக்க முதலாளித்-துவ நாடுகளுக்கு நீங்கள் செல்லும் நோக்கம் என்ன? கருத்து என்ன என்று அவர் கேட்டிருந்தார். அவர் கேட்டிருந்த கேள்வி நல்ல கேள்வி, எனது பேச்சை அந்தக் கேள்வியில் இருந்து ஆரம்பிப்பது, இந்தச் சுற்றுப்பயணத்தின் நோக்கத்தை நீங்கள் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் என்ற காரணத்தினால்,

அந்தக் கேள்வியிலிருந்தே என்னுடைய பேச்சை ஆரம்பிக்க விரும்புகிறேன். இன்றைக்கு உலகில் எந்த இனமும், எந்த நாடும் விடுதலை கோரிப் போராடும் போது, அதற்கு ஆதரவாக உலக நாடுகளின் அனுதாபத்தையும் உதவியை-யும் பெறுவது இன்றியமையாததாகும். அதே நேரத்தில் எதிராக நிற்கக் கூடிய நாடுகளை, இனம் கண்டு, எங்களுக்கு எதிராக செயற்படாமல் ஒரளவிற்கு நடுநிலைமையிலாவது நிற்க வைக்க, அந்த நாட்டு மக்களிடையே பிரச்சாரத்தை மேற்கொள்வதே உலக விடுதலை இயக்கங்கள் எல்லாம் மேற்கொள்கின்ற ஒரு வழியாகும்.

P.L.O அமெரிக்க நாட்டிலே T.V ல் சில பிரச்சாரங்கள் செய்த-தை நான் நேரில் கண்டேன். இதே போல் அவர்களை யாரும் கேட்கவில்லை. மக்கள் மத்தியில் செய்கின்ற, பிரசாரத்தினால் அமெரிக்காவினுடைய கெடுபிடியை நெருக்கடியை அவர்களது கொடிய நிலையை குறைப்பதற்கு அந்த மக்கள் சக்தியை பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் அந்த விதமான பிரச்சாரங்களை செய்கின்றார்கள்.....

இலங்கையில் இனப்படுகொலையின் பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி தடை செய்யப்பட்ட பின்னர் திரு. அ. அமிர்தலிங்கம் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டாரென்றால் அது சாதாரணமான நிகழ்ச்சியல்ல. இடதுசாரிக்கட்சிகள் தடைசெய்யப்பட்டு அதன் தலைவர்கள் தேடப்பட்டு ஏகாதி-பத்திய பத்திரிகைகளால் சிவப்பு வர்ணம் பூசி இனப்படுகொலையை U.N.P செய்ய-வில்லை என்று நியாயப்படுத்திய பின்னர் – U.N.P யின் கள்ளமில்லாத் தன்மையும், தார்மீக, ஜனநாயக சோசலிச குடியரசுத்தன்மைகளையும் நிரூபித்து உலகநாடு-களை நம்ப வைப்பதற்கு நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டவர் தான் முன்-னாள் எதிர்க்கட்சி முதல்வர்.

தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குப்பலம் பெற்ற T.U.L.F ன் செயலாளர் நாயகம் நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் போது வெளியேற அனுமதிக்கபடுகின்றார் என்றால் J.R ன் பரந்த மனத்தை தான் என்ன வென்பது. தமிழ் மக்களை நடுத்தெருவில் வைத்து கொலை செய்த கிட்லரை (HITLER) மீண்டும் ஞாபகப்படுத்திய J.R உடன் பேச்சு-வார்த்தை நடத்தலாம் என்ற B.B.C க்கு பேட்டியளித்த எங்கள் அமிர்தலி-ங்கத்தின் வர்க்க பாதுகாப்பு நடவடிக்கையை என்னவென்பது? இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் இணைத்துப்பார்த்து இந்த இருவருக்குமிடையில்

இருக்கும் வர்க்க ஒற்றுமையை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று நினைக்கின்றார் போலும் அ. அமிர்தலிங்கம்.

முதலாளித்தத்துவ நாட்டு மக்களை நடுங்கவைப்படுத்தவதற்காக அந்த நாட்டு மக்களிடையே பிரச்சாரம் செய்ய வந்த அமிர்தலிங்கம், P.L.O வின் பிரச்சாரத்தை அமெரிக்காவில் நேரில் கண்ட அமிர்தலிங்கம், B.B.C க்கு அளித்த பேட்டியைத்தவிர்ந்த ஏதாவது குறிப்பிடத்தக்க செய்திகள் அவர் பயணம் செய்த நாட்டுமக்கள் அறிவதற்காக பத்திரிகை, வானொலி, T.V ஏதாவதிலாவது வந்திருக்கின்றதா?

P.L.O வின் பிரச்சனைகள் அமெரிக்க மக்களிடம் விற்று விளம்பரக்கட்டணமாக P.L.O விடம் காசைக் கொள்ளையிட அமெரிக்க செய்தி நிறுவனங்கள் (AMERICAN MEDIA) இருக்கின்றனவே தவிர அந்த பிரச்சாரங்கள் ஏதாவது தாக்கத்தை அங்கே ஏற்படுத்தி ஏகாதிபத்தியத்தின் கொள்கையை மாற்றியிருக்கின்றதா என்றால் இல்லை. P.L.O வை அழிப்பதற்காக இந்த நிமிடம்வரை இஸ்ரேலை ஆயுதபாணியாக்கும் அமெரிக்கா லெபனானில் இருந்து P.L.O சரணடைந்து வெளியேறுவதற்கும், இந்த வெளியேற்றம் அந்த விடுதலை இயக்கத்தை நெருக்கடி நிலையில் தள்ளுவதற்கும் காரணமாயிருந்த அமெரிக்கா, இன்று P.L.O வின் நெருக்கடி நிலையை கொண்டாடுகின்றது. P.L.O வின் சரித்திரத்தை யறிந்த அமெரிக்க மக்களால் நாடற்று உலகமெல்லாம் சிதறுண்ட அந்த மக்களுக்கு சார்பாக ஒரு துரும்பைத்தன்னும் அசைக்க முடிந்ததா? அல்லது அமெரிக்க மக்கள் அனுபவிக்கும் முதலாளித்தத்துவ ஜனநாயக வரம்புகளை மீறி அப்படி ஏதாவது மாற்றத்தை செய்யத்தான் முடியுமா?

P.L.O வின் பிரதிநிதி ஒருவருடன் தனிப்பட்ட முறையில் நட்புக்கொண்டிருந்தார், பேச்சுவார்த்தை நடத்தினார் என்ற காரணங்களுக்காக, ஜிம்மி கார்ட்டரின் (JIMMY-CARTER) நிர்வாகத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க தூதுவராக இருந்த கறுப்பு இன அண்ட்ரூ யங் (ANDREW YOUNG) பதவியில் இருந்து விலக நிர்ப்பந்திக்கப்பட்டது அநீதியானது என்று போராட்டம் நடத்தி அவரைப்பதவியில் தொடர்ந்தும் இருக்கப்பண்ண முடிந்ததா? இதைக் கூட செய்ய சுதந்திரமில்லாத அமெரிக்கமக்கள் எப்படி உலகாச-

பயணத்திற்காக எப்போதோ வந்த, (கொழும்பு நகரைத் தலைநகராக கொண்ட) இலங்கையின் தமிழ்பேசும் மக்களின் தமிழீழத்தைப் பெற்றுத்தர உதவி செய்ய போகின்றார்கள்? அல்லது வியட்நாம் சண்டைக்குப்போய் அப்பாவி-மக்களை கொல்லமாட்டோம் என்று முற்போக்கு வாதம் பேசிய அமெரிக்க இளைஞர் சமுதாயத்தை போருக்குப் போ அல்லாவிடில் சிறைக்குப் போ என்று நிர்ப்பந்திக்காமல் விட்டதா?

இன்று அமெரிக்க ஏவுகணைகள் வேண்டாம் ஐரோப்பாவின் வீதிகளை முற்றுகையிட்டிருக்கும் இளம் சமுதாயத்தின் முற்போக்கு உணர்வுகள் அமெரிக்காவால் சிறிதளவுதன்னும் மதிக்கப்பட்டதா? என்னதான் இவர்கள் லட்சக்கணக்கில் திரண்டு ஊர்வலம் நடத்திய பின்னரும் அமெரிக்க ஏவுகணைகள் ஐரோப்பிய மண்ணில் நிலைபெற்றுவிட்டன.

முதலாளித்தத்துவ நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த இவர் இங்கேயுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் யாரையாவது சந்தித்து கதைத்தாரா? அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு பத்திரிகைகள் எதிலாவது ஏதாவது அறிக்கைகள் விட்டாரா? பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள இவர் ஐரோப்பிய பாராளுமன்ற வாதிகளுள் முற்போக்கானவர்களான GREEN கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான செல்வி. பேத்ரா கெலி (PETRA KELLY) ஐயோ அல்லது வில்லி பிராண்டையோ (WILLY BRANDT) அல்லது மைக்கேல் (F)ட் (MICHEL FOOT) ஐயோ சந்தித்து கதைத்ததாக இங்கே வாழும் தமிழர்களுக்கு தெரியவில்லை.

தீவிரவாத இளைஞர் இயக்கங்களை ஒன்றுபடும்படி வலியுறுத்தி பேசிய பின்னர் தேசிய இராணுவம் என்று வெருட்டிய இவர் இங்கேயுள்ள விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் யாரையாவது சந்தித்துப்பேசி இங்கே ஒற்றுமை முயற்சியை ஏற்படுத்த தவறியது ஏன்? இவர்கள் பிரிந்திருந்தால் U.N.P யுடன் தனது கொண்டாட்டத்தை தொடரலாம் என்பதாலா?

தமிழீழ மக்களின் சர்வதேச தொடர்பும் பிரசாரமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடனும் உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை இயக்கங்களுடனும் இவைகளுக்கு ஆதரவு வழங்கும் சோசலிச நாடுகளுடனும் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்து அமைக்கப்பட -

வேண்டுமேயொழிய, இவர் சொல்வது போன்ற முதலாளித்தத்துவ நாடுகளை நடு நிலைப்படுத்தும் நாய்வாலை நிமிர்த்தும் முயற்சிகளால் உலக ஏகாதிபத்தியத்திற்கு தமிழ்மக்களின் புரட்சி உணர்வுகளை தாரைவார்க்க முடியாது.

ஜேர்மனியிலும், பிரான்சிலும் நீண்ட பிரசங்கங்களையும், கேள்விகளுக்கு நக்கல் மறுமொழிகளையும் கூறிய இவர், 1956ல் இருந்து இனக்கலவரங்கள் எப்படி நடந்தது என்ற கதையையும், எத்தனை இனக்கலவரங்கள் நடந்தது, எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டனர், எத்தனை கடைகள் எரிக்கப்பட்டன, எத்தனை தந்திகள் ஜனாதிபதிக்கு அடிக்கப்பட்டது போன்ற தகவல்களால் நிறைந்திருந்ததே தவிர எதிர்பார்த்த மாதிரியே தமிழீழப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான அனுபவ[illegible]வு தகவல் தன்னும் தரப்படவில்லை. ஆனால் தமிழ் மக்களின் புரட்சி உணர்வுகளை மழுங்கடிக்கக்கூடிய வகையில் தெரிவித்த கருத்துகளையும் திட்டங்களையும் மேலே திறனாய்வு செய்திருக்கின்றோம்.

பிரான்சில் பல கேள்விகளுக்கு விதண்டாவாதமாக மறுமொழிகளைக் கூறிய இவர் ஒரு கேள்விக்கு நகைச்சுவையாகவும் பதில் கூறியுள்ளார்

<u>கேள்வி</u> What is the Political Ideology Underline the T.U.L.F For Future State of Tamil Ellam? (வரும் தமிழீழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் சித்தாந்தம் என்ன?)

<u>பதில்</u> தமிழர் விடுதலைக்கூட்டணியை பொறுத்தவரை நாங்கள் தெளிவாக எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே கூறியுள்ளோம்.

அ. விஞ்ஞான ரீதியான சோசலிசம்

ஆ. அணிசேராக் கொள்கை

இ. மதச்சார்பு அற்ற அரசு. இவற்றைத்தான் நாம் அமைக்க விரும்புகின்றோம். ஒரு சுதந்திர சோசலிச குடியரசை அமைப்பதுதான் எனது இலக்கு என்பதை நான் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றேன். (சிறிய கைதட்டல்) அரசியல் என்றால் என்னவென்று தெரியாத தமிழ்மகன் கூட சிரிக்கலாம் இந்தக் கேள்வியின் பதிலுக்கு. மார்க்ஸ் என்ற மாமேதையின் பெயரை தன் வாழ்நாளில் இன்றுவரை எத்தனைதரம் அமிர்தலிங்கம் கூறியிருக்கின்றார்? எந்தத் தமிழனாவது ஒருமுறையாவது கேட்டிருக்கின்றீர்களா?

# தமிழீழ, சிறீலங்கா செய்திகள்

## சிறீலங்காவில் இருந்து வெளியாகும் செய்தித்தாள்களில் இருந்து திரட்டப்பட்டவை

### வடமாகாணத்திலிருந்து அகதிகள் விரட்டப்படுகின்றனர்

யாழ் மாவட்ட அகதிகள் முகாமில் தஞ்சம் கோரியிருந்த 5750 மலையகத் தமிழர்களும், ஒரு சிறு தொகைப் பணத்தை சலுகையாகப் பெற்றுக்கொண்டு வடமாகாணத்தை விட்டு வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, அகதிகள் முகாமில் இருப்பவர்களின் எண்ணிக்கை, இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் போன்ற விபரங்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சேகரிக்கின்றார். இந்த மக்களை வடமாகாணத்தில் குடியமர்த்தும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை சில புனர்வாழ்வு நிறுவனங்கள் முயற்சிகள் எடுத்து இவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்துவதற்கு தயாராக இருந்த போதும், அரசாங்கத்தினால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இந்த மக்களில் அனேகர் பிரசா உரிமை இல்லாதவர்கள் என்பதினாலேயே அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் இவர்களை குடியமர்த்த விரும்பவில்லை.

### பாதிக்கப்பட்டோரின் நலன்புரி முன்னணி

வடகிழக்கு பகுதிகளில் அகதிகளாக வந்துள்ள மக்கள் பாதிக்கப்பட்டோரின் நலன்புரி முன்னணி என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். பலவிதத்திலும் துன்பப்படுத்தப்பட்டும், சுரண்டப்பட்டும் வருகின்ற இந்த மக்களின் புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட தேவைகளைக் கவனிக்கவே இந்த முன்னணி அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினதும், உண்மையான பொதுஸ்தாபனங்களினதும் தனியார்களின் உதவியுடனும் நேர்மையான வாழ்க்கை நடத்த அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ள பகுதிகளில்

எம்மீது காட்டப்படும் பாரபட்சத்தை போக்கும்படியும் இந்த முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

## அகதிகள் புனர்வாழ்வுக்கழகம்

வடகிழக்கில் தனியார் காணிகளை விலக்கு வாங்கி, அகதிகள் முகாமை விட்டு வெளியேறமுடியாத நிலையில் இருப்பவர்களை குடியமர்த்தும் திட்டம் ஒன்றை அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. இனக்கலவரங்களினால் வீடுகளை இழந்தவர்களுக்கும், வேறுவிதங்களில் பாதிக்கப்பட்டு சட்ட உதவிகள் இன்றி இருப்பவர்களுக்கும் உதவிசெய்யும் முகமாகவும், இக்கழகம் சட்டத்தரணிகள் பலரைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றையும் அமைத்துள்ளது. நாட்டின் எந்தப் பகுதியிலேனும் இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இக்கழகத்தின் உதவியைப் பெறவிரும்பின் — அகதிகள் புனர் வாழ்வுக்கழகம்

இல 66 தேவாலய வீதி

யாழ்ப்பாணம்

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியிலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் சகல கல்விப்பிரிவுகளையும் திறவுமாறு கோரி தமிழ்பட்டதாரி மாணவர் 24.10.83ல் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர். தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு திரும்பியும் அழைக்கப்படுவதை முற்றாக நிராகரித்து, இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு யாழ் திரும்பிய மாணவரும், யாழ்பல்கலைக்கழகமாணவரும் கூட்டாக இந்த ஊர்வலத்தை நடத்தினர். 2000 மாணவர் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் நான்கு மணி நேரமாக, நான்குமைல் தூரம் சுலோக அட்டைகளையும், எதிர்ப்பு கோசங்களை ஒலித்தவண்ணமும் நடைபெற்றது. மும்மொழிகளிலும்

எழுதப்பட்ட சுலோகங்கள் சில :-

தமிழ்ப்பட்டதாரி மாணவரை தமிழ்ப்பகுதிகளுக்கு இடம் மாற்றுக

தமிழ் மாணவர்கள் என்ன பலிக்கடாக்களா?

பல்கலைக்கழகம் வெலிக்கடை அறைகளா?

கிழக்கு மாகாண பட்டதாரி மாணவர்

தென் இலங்கை அழைப்பிற்கு எதிராக சுவரொட்டிகள்.

மட்டக்களப்பு இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு பொறுப்பாக உள்ள செயற்குழுக்கூட்டத்தில், தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள புதியமாணவர்களுக்கான ஆங்கிலவகுப்புக்களை மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் நடத்தும்படி புதியமாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் வேண்டியுள்ளனர்.

சகல கல்விப்பிரிவுகளையும் மட்டக்களப்பு பல்கலைக்கழககல்லூரியிலே ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் இப்பகுதி பட்டதாரி மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் பின்வரும் வாசகங்களை கொண்டிருந்தது :-

"மொரட்டுவையில் ஒரு தமிழ் விரிவுரையாளரும் தமிழ்மாணவரும் பலி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மற்றொருவரும் பலி மீண்டும் எத்தனை பேரைப் பலி கொள்ள தென் இலங்கைக்கு எம்மை அழைக்கின்றீர்கள்"

"தமிழ்ப் பேராசிரியர்களை நான்காவது மாடிக்கு கொண்டு சென்ற நிர்வாகமே எம்மை எங்கு கொண்டு செல்ல அழைக்கிறாய்."

"மே மாதம் தாக்கப்பட்ட எம்மை யூன் மாதம் மீண்டும் அழைத்தாய் கிடைத்தது என்ன? பெற்றோல் குண்டுகளும் முகமூடி மனிதர்களின் தாக்குதலும் தான்."

## இடைத்தேர்தலை நிறுத்திவைக்குமாறு கூட்டணி வேண்டுகோள்.

கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோர், திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு அங்கு நடைபெறவேண்டிய இடைத்தேர்தலை பின்போடுமாறு இலங்கை ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னர் பிரிவினைக் கொள்கையை வலியுறுத்தாமல் திரு R. சம்பந்தனை திருக்கோணமலை இடைத்தேர்தலில் மீண்டும் நிறுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது.

## மூன்று தமிழர்கள் போட்டி மோதுகின்றார்கள்.

ஐ. தே. கட்சி சார்பாக திருக்கோணமலைத் தேர்தலில் போட்டியிட மூன்று தமிழர்கள் உட்பட ஒன்பது பேர் நியமனம் கோரி மேலிடத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

## ஐ. நா. பொதுச் செயலாளருக்கு தமிழர் பிரச்சினைகள் பற்றி விளக்கம்.

தமிழக மின்துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன். ஐ. நா பொதுச்செயலாளர் நாயகத்தை 25/11/83ல் சந்தித்து தமிழர் பிரச்சினைகள் பற்றி விபரமான விளக்கங்கள் அளித்தார்.

## தமிழர் விவகாரமோ <u>அல்ல</u> தமிழர் பயங்கரவாதமோ பொருளாதாரமே முக்கிய பிரச்சினை.

தமிழர் பிரச்சினை, பயங்கரவாதம் ஆகியனவே இந்நாட்டில் முக்கிய பிரச்சினைகள் என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலர் நினைக்கின்றார் கள். இது தவறு பொருளாதாரப் பிரச்சினையே எமது முக்கிய பிரச்சினை என காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## வரையறுக்கப்பட்ட மாநிலசுயாட்சி மீதான

## பார்த்தசாரதி - தமிழ்த்தலைவர்கள் பேச்சுவார்த்தை

பார்த்தசாரதி - தமிழ்த்தலைவர்கள் பேச்சுவார்த்தை 17.11.83 ல் டில்லியில் ஆரம்பமானது. திருவாளர்கள் M. சிவசிதம்பரம், T. சிவசிதம்பரம் வி. ஆனந்தசங்கரி, திரு வி. யோகேஸ்வரன், திரு R. சம்பந்தன் திரு. நீலன் திருச்செல்வம், திரு K.P. இரத்தினம் — திரு S. தொண்டமான் இந்தியதூதுவர் திரு S.J.S சத்வால் ஆகியோர், திரு பார்த்தசாரதியின் அழைப்பின் பேரில் வியாழக்கிழமை 16.11.83 ல் புதுடில்லி வந்தடைந்தனர். அமிர்தலிங்கமும், தொண்டமானும் இங்குள்ள பெரிய HOTEL ஒன்றில் தங்கியிருந்தனர். அமிர்தலிங்கம் தங்கியிருக்கும் மேல்மாடியில் சிறப்புப் பொலிசார் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபட்டுள்ளனர். ஏனைய கூட்டணித்தலைவர்கள் புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்கியுள்ளனர்.

முதல் நாள் பேச்சுவார்த்தையின் பின்னர் அரசு தெரிவித்த யோசனைகளை தமிழர்விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு கூடி ஆராய்ந்த பின்னர் இரண்டாவது நாளாக பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடந்தன. அரசு யோசனையின் உட்கருத்துக்கள் மிக அந்தரங்கமானவை எனத் தெரிவித்த திரு அ. அமிர்தலிங்கம் விபரங்கள் எதனையும் வெளியிட மறுத்துவிட்டார். முட்டுக்கட்டைகள் இன்றி மூன்றாவது தடவையும் சனிக்கிழமை சந்தித்துப் பேசிய பார்த்தசாரதி - தமிழ்த் தலைவர்கள்

(1) தமிழினத்தின் பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும் உறுதிப்படுத்தும் உத்தரவாதம்.

(2) பாரம்பரியமாகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளின் காணிக் குடியேற்றம்

(3) திருக்கோணமலை துறைமுகநிர்வாகத்தை மாநில சுயாட்சிக்கு உட்படுத்தாது மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கம், அதிகார எல்லை

(4) தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பு பல்கலைக்கழக அனுமதி போன்ற பல விடயங்கள் குறித்து கருத்து பரிமாற்ற உத்தேச சுயாட்சி முறையில் அமையவிருக்கும் அதிகார வரம்புகளுக்கு விளக்கம் கோரினர்.

நடந்து முடிந்த மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னரும் உடன்பாட்டிற்கான நெறி தோன்றவில்லை.

பிரச்சினைக்கு தீர்வாக இலங்கை அரசு முன்வைத்துள்ள யோசனைகள் 1965ல் செய்யப்பட்ட டட்லி செல்வா ஒப்பந்தத்தை மருவியதாக ஆனால், சற்று முன்னேற்றமான சரத்துக்களை உள்ளடக்கியதாகவே என்று இலங்கை அரசு கோருவதாக தெரிகின்றது.

ஆரம்ப இடைநிலை கல்வி, விவசாயம், கூட்டுறவு, உள்ளூர் வர்த்தகம் போன்ற துறைகளில் மட்டும் அதிகாரம் செலுத்தக் கூடியதாகவும், குடியேற்றத்தைப் பொறுத்தமட்டில் உள்ளூர் நீர்பாசன திட்டங்கள் உள்ள பகுதிகளில் மாத்திரம் குடியேற்றத்தை சீர் செய்யும் அதிகாரம், பொலிஸ், கடற்படை, இராணுவம் ஆகியன தொடர்ந்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இயங்குதல்.

மாநில சபைகள் குட்டி கூட்டமன்றம் போல் இயங்க அனுமதிக்கப்படும் இச்சபைகள் தீர்மானிக்கும் தீர்மானங்கள் பின்னர் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

## உத்தேச மாநில சபை யோசனை மீது ஜெயவர்த்தன - இந்திரா பேச்சுவார்த்தை.

பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்னர் இந்திராவைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாநில சபை யோசனைகள் தொடர்பாக அபிப்பிராயங்கள் தெரிவித்தனர்

இந்தியப்பிரதமருடன் பேச்சுவார்த்தையின் போது ஜெயவர்த்தன சர்வஜனவாக்கெடுப்பை உத்தேச மாநில சபை யோசனை மீது நடத்த வேண்டுமென வலியுறுத்திய போதிலும் இறுதியில் அதைக் கைவிட இணங்கினார்.

இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையேயான கருத்துவேறுபாடுகள் அதிகமுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

புதுடில்லியில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டபின்னர் சென்னையில் திரு S. தொண்டமான் "இலங்கையின் கிழக்குப்பகுதியை வடக்குப் பகுதியுடன் இணைத்து மாநிலம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைபற்றி ஜெயவர்த்தன தனது மந்திரிசபையுடன் கலந்தாலோசித்து முடிவு செய்வார் எனத் தெரிவித்தார்.

இலங்கைத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக புதுடில்லியில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் பயனாக வெளிப்படும் பெறுபேறுகளும் யோசனைகளும், கொழும்பில் கூடவிருக்கும் அனைத்துக் கட்சி மகாநாட்டின் பரிசீலனைக்கும் முடிவுக்கும் விடப்படும். இந்த மகாநாட்டின் ஆரம்ப பேச்சுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அழைக்கப்படமாட்டார்கள். ஆரம்ப பேச்சுக்களின் போது தமிழர்விடுதலைக் கூட்டணியினரை எக்கட்டத்தில் அழைப்பது என முடிவு செய்யப்படும்

1.12.83" புதுடில்லியில் இருந்து நாடு திரும்பிய ஜெயவர்த்தன அங்கே நடைபெற்ற பேச்சுவார்த்தை சம்பந்தமாக. பின்வருமாறு அறிக்கை விடுத்துள்ளார்:-

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டால் மட்டுமே தீர்வுக்கான சாத்தியவழிகள் குறித்து அவர்களுடன் நான் பேச்சுவார்த்தைகள் எதையும் ஆரம்பிக்க முடியும் என்பதை நான் தெளிவுபடுத்தியதை இங்கு நினைவூட்டவிரும்புகின்றேன்.

தமிழர்பிரச்சினைக்கு, தங்களுக்கு ஏற்புடையதான ஒரு தீர்வு காணப்படுமாயானால் தனிநாட்டுக்கோரிக்கையை கைவிட தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இருப்பதாக எனக்கு கிடைத்த தகவல்கள் மூலம் அறியமுடிந்தது இது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

—— இந்த யோசனைகள் குறித்து ஆராய சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டுவதற்கான திகதிகள் குறித்து இலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளுடனும் நான் முதலில் ஆலோசனை நடத்துவேன் அதை அடுத்து அரசியல் கட்சிகள் மகாநாட்டைக்கூட்ட நான் உத்தேசித்துள்ளேன் அந்த மகாநாட்டில் இந்த யோசனைகள் ஆராயப்படும்.

## பிரதேச சுயாட்சி பற்றிய நிபந்தனைகள்

சபையில் கம்பகா எம்.பி - திரு S.D. பண்டாரநாயக்கா வரவு செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பின்வருமாறு பேசினார் :-

ஒவ்வொரு ஆயிரம் நாடற்றவர் பேரிலும் இந்திய அரசு வருடாந்தம் 500 கோடி ரூபாய் செலுத்த வேண்டுமென்று இலங்கை அரசு கோர வேண்டும்.

இலங்கையின் சுயாதிபத்தியம், ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கவும் எமது பாதுகாப்பு வசதிகளை நவீனமயப்படுத்தவும் சக்திவாய்ந்த நட்புநாடு ஒன்றுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளும் நேரம் வந்துவிட்டது.

இந்தியப் பிரஜைகளான தமிழர்களுடன் இந்திய அரசு ஒரு இணக்கத்திற்கு வந்து யாழ்ப்பாணப் பிரிவினை வாதிகளுக்கு தென் இந்தியாவில் புகலிடம் அளிப்பதில்லையென்றும், தி.மு.க பயங்கரவாதிகளுக்கு வடக்கு கிழக்கில் புகலிடம் கொடுப்பதை தடுப்பதென்றும் முடிவெடுத்தால் அது நல்லதே.

2500 வருடங்களின் பின் எமது நாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு நெருக்கடியை வெற்றிகரமாக எதிர்நோக்க பிரிவினையை எல்லாச் சிங்களமக்களும் ஒன்றுபட வேண்டியது முக்கியமாகும்.

திருகோணமலை மற்றும் விமானதளங்கள், வடக்கு கிழக்கில் உள்ள துறைமுகங்கள் ஆகியவை மத்திய அரசின் நிர்வாகத்திலும் கட்டுப்பாட்டிலும் இருக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கின் கடலோரமும், கடற்பகுதியும் மத்திய அரசின் பாதுகாப்புப் படையினரால் பாதுகாக்கப்பட வேண்டும்.
இந்தியாவின் மத்திய அரசு பிரிவினைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது போல், அவசியமானால் வடக்கு, கிழக்கிலுள்ள பாதுகாப்பு படைகள் ஜனாதிபதி ஆட்சியை நடத்தக் கூடியவையாக இருக்க வேண்டும்.
வடக்கு கிழக்கிலுள்ள எல்லா சமய வழிபாட்டிடங்களும், புராதன சின்னங்களும் மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.
வெளிநாட்டு அரசாங்கங்களுடன் மேற்கொள்ளப்படும் பொருளாதார ஒப்பந்தங்கள் மத்திய அரசாங்கத்தினாலேயே செய்யப்பட வேண்டும்.
உத்தியோக மொழிச் சட்டம் நாட்டின் எல்லாப்பகுதி மாவட்டங்களிலும் அமுல் நடத்தப்பட வேண்டும்.
தேசிய பாதுகாப்பு, காணி விநியோகம், வெளிவிவகாரம் ஆகியன மத்திய அரசின் கீழ் இருக்க வேண்டும்.
அபிவிருத்திச் சபைகளின் பொலிஸ் படை மத்திய அரசின் பொலிஸ் மா அதிபரால் பயிற்றுவிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும்.

## ஒன்பதாவது சர்வதேச, விவசாய தோட்டத் தொழிலாளர் மகாநாடு.

**புடாபெஸ்ட் (BUDAPEST) நகரில் நடைபெற்ற இம்மகாநாட்டில், 7 கோடி விவசாய- தோட்டத் தொழிலாளர் சார்பாக 113 தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டன. இம்மகாநாட்டில் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் S நடேசன் ஆற்றிய உரையை கீழே தருகின்றோம்.**

ஐக்கிய அமெரிக்காவினதும், நேட்டோ நாடுகளின் தலைவர்களினதும் நடத்தைகள் காரணமாக சீர்குலைந்து கொண்டிருக்கும் ஒரு சர்வதேச சூழ்நிலையில் நாம் கூடுகின்றோம். 1970ல் பெற்ற இணக்க அமைதியின் சோவியத் ஒன்றியத்தின் பலத்தில் மிஞ்ச வேண்டும் என்ற அவாவினால் மீற எத்தனித்து நாசமாக்கிக் கொண்டிருக்கின்றது.

ஐரோப்பாவை மனித இனத்தையே நாசமாக்கக்கூடிய பயங்கர வெடிமருந்துக் கிடங்காக மாற்றியமைக்க அமெரிக்கா எத்தனிக்கின்றது.
ஒரு அனல் அணுயுத்தத்தின் இன்றும் மானிட இனத்தைக் காப்பாற்றுவது உலகளாவிய தொழிற்சங்க இயக்கத்தின் பிரதான கடமையாக அமைந்துள்ளது.

## ஏகாதிபத்தியமும் திருகோணமலைத் துறைமுகமும்

எமது பிராந்தியத்தில் உள்ள இந்து சமுத்திரத்தில் இராணுவ முற்றுகைகள் பயங்கரமாக வளர்ந்துள்ளன. ஆதலால் இந்த சமுத்திரத்தை சமாதானப்பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவதற்கான போராட்டத்தில் தொழிற்சங்கங்களினது கடமை முக்கியமானது எனக் கூறவேண்டும்

இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்க கடற்படைக்கு கிடைக்கவிருந்த வசதிகள் இலங்கை சமாதான இயக்கத்தினதும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தினதும், சக தொழிற்சங்கங்களினது முயற்சியாலும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## சுவர்க்கமும் நரகமும்.

வெளிநாட்டு மூலதனத்தின் பெரும் நோக்கத்துடன் இலங்கையின் அரசாங்கம், தொழிலாளர் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஜனநாயக உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கின்றது. சுதந்திரவர்த்தக வலயத்தில் மிகவும் குறைந்த கூலிக்கு உழைப்பினைப் பெற்று இலாபத்தைச் சுருட்டிக்கொண்டு போக அரசாங்கம் வழிவகுத்துள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கும், இலங்கையில் உள்ள பெரிய தனவந்தர்களுக்கும் இலங்கை ஒரு சுவர்க்கமாக அமைந்துள்ளது. இலங்கை தொழிலாளர் வர்க்கத்திற்கு விசேடமாக நாளொன்றுக்கு $\frac{3}{4}$ டொலர் மட்டுமே சம்பளமாகப் பெற்றுவரும் தோட்டத் தொழிலாளருக்கு நரகலோகமாக அமைந்துள்ளது.

## ஜனநாயக உரிமை மீது தாக்குதல்

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்தில் இருந்து தொழிலாளரின்

ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டன. வாழ்க்கைத் தரம் சீரழிந்தது. 1980 யூலை வேலைநிறுத்தக்காரர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இன்றும் 10,000 பேர் வேலையின்றி தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் சுதந்திரமாக தொழிற்சங்கம் அமைப்பதற்கான 87 ஆவது சரத்தும், வேலைநிறுத்தம் செய்ய கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கான 98 ஆவது சரத்தும், தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை சம்பந்தமான 110 ஆவது விதி ஆகியன அரசாங்கத்தால் மீறப்பட்டுள்ளதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

சம்பள உயர்வு விடயத்தில் தோட்டத் தொழிலாளர் பாரபட்சமாக நடத்தப்படுகின்றார்கள் அரசாங்கத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 70, ஒவ்வொரு வாழ்க்கைச் செலவு புள்ளி உயர்வுக்கும் ரூ 2 வீதம் வழங்கப்பட்ட அலவன்ஸ, கடந்த வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட ரூ 100 போன்ற சம்பள உயர்வுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. இந்தியன் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியின் தலைமையில் இரண்டு மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. 10 லட்சம் தொழிலாளர் பங்கு பற்றிய இப்போராட்டங்களின் தாக்கத்தினால் அரசாங்கம் சம்பள நிர்ணய சபை மூலம் தோட்டத் தொழிலாளரின் நாட்சம்பளத்தை ரூ 2 ஆல் கூட்டியது.

**தமிழ்மக்கள் மீது வன்செயல்**

தமிழ்மக்களுக்கும் தமிழ் தோட்டத் தொழிலாளருக்கும் எதிராக பயங்கரமான வன் செயல் 1983 யூலை 24ல் கட்டவிழ்த்து விடப்பட்டது. அரசாங்கம் அமைதியை நிலைநாட்டத் தவறிவிட்டது. 10 தோட்டத் தொழிற்சங்கங்கள் இவற்றைக் கண்டித்தன. உண்மையிலேயே வன்செயல்களுக்கு காரணமாக இருந்தவர்களைத் தண்டிப்பதற்கு பதிலாக, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இடதுசாரிக்

கட்சிகள் மீது பயங்கரமான பழியைச் சுமத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இரண்டு வாரங்கள் நாட்டிற் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப் படாமையினால் காட்டுமிராண்டித்தனம் தலைதூக்கி தாண்டவமாடியது.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலையைத் தடுக்க தக்க தருணத்தில் சரியான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறிவிட்டது. ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாக பல்வேறு முகாம்களில் தஞ்சம் புக நேர்ந்தது. உலக தொழிற் சங்க சம்மேளனமும் சர்வதேச சுதந்திர தொழில் ஸ்தாபனமும், ஏனைய தொழிற் ஸ்தாபனமும் ஏனைய தொழிற் சங்கங்களும் வன்செயல் சம்பந்தமாக அரசாங்கத்தைக் கண்டித்ததுமல்லாமல் சிறையில் வைக்கப்பட்ட இடதுசாரித் தலைவர்களை விடுதலை செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

## ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளுக்கு எதிரான நடவடிக்கை

கடந்த வன்செயல் சம்பந்தமாக இன்னுமொரு முக்கிய அம்சம் என்னவென்றால், ஏகாதிபத்தியமும் அதன் இலங்கை ஆதரவாளர்களும் இச் சூழ்நிலையைப் பாவித்து அமெரிக்கா தனது இராணுவத்தை இலங்கையில் நிறுத்த முயற்சி எடுக்கப்பட்டது. அத்தோடு சோவியத் ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் உள்ள இராஜரீக தொடர்பை துண்டிப்பதற்கும் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் மோதல் ஏற்படுத்தி இந்துமகா சமுத்திரத்தை ஒரு அணு ஆயுத யுத்தகளமாக மாற்றியமைக்க பெரும் முயற்சிகள் செய்யப்பட்டது. இம் முயற்சிகள் தற்காலிகமாக தோற்கடிக்கப்பட்டிருந்த போதிலும் பூரணமாக கைவிடப்படவில்லை என்பதனால் உலக தொழிற்சங்க இயக்கமும், சமாதான சக்திகளும் இந்த பேராபத்தை புரிந்து கொண்டு செயல்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகின்றோம்.

# Grenada Today! Trincomalee Tomorrow!

The Invasion of Grenada has proved beyond doubt, that the power and the Might of the United States of America is dependent on the very exploitation and the Oppression of the Third World People! The interests of the U.S.A are therefore directly opposed to those of the People of the Third World. The fact that not even International Law, let alone principles or morals, will stop them from using any means necessary to maintain this relationship has been clearly shown by recent events in Grenada.

## Invasion of Grenada

The sovereign State of Grenada was violently invaded by the American Forces on October 26th, 1983. President Reagan is now trying to justify this crime by clutching at flimsy straws. The real and only reason for the long planned and well rehearsed invasion, was that the People of Grenada were in control of their own destiny. On March 13, 1979, a People's Revolutionary Government had been established in Grenada with the overthrow of the Fascist dictator Gairy. This was enough to threaten the Mighty power of the USA, even though Grenada is but a small Island of 133 sq. miles with a population of a mere 110,000 people!

## Occupation of Lebanon

In the war torn city of Beirut, NATO forces under the guise of "Peace-keeping" are attempting to establish a Fascist government under the control of Amin Gemayel and the Phalangists. The fact that such an administration is actively opposed to the interests of large sections of the Lebanese people seems to matter not at all! Refering to the very people whose country it is, who seek justice and equality in Lebanon, President Reagan has said "We must be determined more than ever that they cannot take over that vital and strategic area ..." (Times 24.10.83).

## "Vital Interest" in TAMIL EELAM

America has had, not surprisingly, its eye on the TRINCOMALEE Harbour, which would also be a valuable asset as a military base for them, supporting that at Diego Garcia. What's more, the reactionary, puppet government of Sri Lanka is actually likely to make this concession, because:

a) The Rulers of Sri Lanka would be prepared to sell the freedom and dignity of their own people if they could get any personal benefit, however short-term, that may be, and

b) The Rulers of Sri Lanka also see it as one way of fragmenting the Tamil Eelam Nation and making our struggle for National Liberation that much more difficult!

This is why 'Sinhalese Colonisation' has been accelerated in TRINCOMALEE; US Defence Secretary Casper Weinberger, was in Sri Lanka in October 1983 to discuss plans for TRINCOMALEE; and agreement has already been reached concerning Oil Storage Facilities.

## Resistance

For all the Might of the USA, the Oppressed People of the World have the power of a Just and Noble Cause on our side. No Greed, however great, no Oppression, however brutal, can overcome permanently the cause of Freedom, Dignity and Justice!

That is why the two heroic Martyrs in Beirut, on October 23rd 1983, could so devastatingly and successfully destroy two military Headquarters and with it the lives of over 300 members of the Occupying Forces!

That is why the gallant Fighters in Grenada continued to resist the American aggressors even in such an unequal war! Three days after the Invasion, America had had to double the size of its Force to 6,000 and yet the fierce resistance continued!

That is why we the People of Tamil Eelam can carry forward our struggle for National Liberation. To secure Freedom, Dignity and Justice for our people we must urgently prepare to defend ourselves against every form of Oppression!

---

***Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)***

விடுதலைக்கிரலை - தன்பணியை சரியே செய்ய
அதனை விமர்சித்து நெறிப்படுத்துவது தமிழ்மக்க
ளின் கைகளில் தங்கியிருக்கின்றது.

கேள்விகள்

கட்டுரைகள்

கவிதைகள்

மற்றும் விடுதலைத் தயாரிப்புக்கான ஆக்கங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி:-

K. PARAMADEVA
P.O.BOX 91
6953 GUNDELSHEIM

பின் அட்டை:

1980 புதுவருட செய்தியாக தமிழர் விடுதலைக் கூட்டணி
யின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் தனது
கைப்பட எழுதி 'சுதந்திரன்' பத்திரிகையில் பிரசுரமான
புத்தாண்டு செய்தியின் பகுதி.

ON LOOKER (22.8.83) பத்திரிகை நிருபர் - இந்திய
சுதந்திர போராட்ட இயக்க மாதிரியான சட்டமறுப்பு, சத்தியாக்
கிரக நடவடிக்கைகளில் ஈடுபட்டீர்களா என்ற கேள்விக்
கு பதிலாக - அதற்கு நீங்களுக்கு நேரமில்லை என்று
தெரிவிக்கின்றார்.

A. AMIRTHALINGAM

# "Life has become impossible"

*IN AN interview with* INDIA TODAY *Senior Editor* S. VENKAT NARAYAN, *Appapillai Amirthalingam, general secretary of the Tamil United Liberation Front, explained his party's stand in the negotiations with the Sri Lankan Government. Excerpts:*



**Amirthalingam: "It's up to the President"**

**Q. *President Jayewardene seems to have conceded most of your demands. Why are you insisting on the northern and eastern provinces being joined together?***

**A.** Beause these areas have been the traditional homeland of the Tamils in Sri Lanka. Even Bandaranaike had conceded that the northern and eastern districts be amalgamated. Our security and our territory's integrity are important for us. The Tamils were in a majority in the eastern province before World War II. For instance, in Trincomalee the Tamils comprised 54 per cent of the population at the time of Sri Lanka's independence and the Sinhalese only 4.5 per cent. Now the Sinhalese account for 35 per cent and the Tamils 33 per cent.

This has been possible because of the Government's planned colonisation of Tamil areas by Sinhalese. We cannot allow this encroachment on our territory to go on for ever. Our fear is that we may be gradually squeezed out of the eastern provinces. In times of crises, this will force us either to jump into the ocean or across the ocean.

**Q. *If he concedes this demand, the President may have problems in carrying the Sinhalese with him.***

**A.** Frankly, there's no opposition worth the name in Sri Lanka. The opposition groups have been reduced to impotence. He is assured of staying in power for six years. The media is controlled by the Government. President Jayewardene is stronger than many people think. If he is determined to do something, it is not all that difficult for him to get it done.

**Q. *It may not be tough selling the idea to the Sinhalese at large. His problem appears ~~to be convincing~~ the hawks within his own Government.***

**A.** It is for the President to put his own house in order. He raised certain monsters for his own use at a certain point of time. Now he must cut them to size. And I know he is capable of doing it.

**Q. *The President says that peace has returned to the island and that the Tamils and the Sinhalese are working together all over again.***

**A.** I'm afraid the President is ill-informed. None of the Tamil teachers, public servants and students have returned to Sinhala areas. Of the 1,35,000 Tamils who were forced to take shelter in refugee camps, over 20,000 are still living in them. Nearly 25,000 Tamils have come away to India and another 10,000 may have gone to western and south-east Asian countries. The Tamils continue to feel terribly insecure.

**Q. *In case the talks fail because of your insistence on the Jaffna and Trincomalee areas being made into one province, what will you do?***

**A.** Life for the Tamils has become impossible in the southern parts of the island too, particularly after the July riots. They are being denied opportunities of employment, holding land, doing business or running industries. Now this is happening even in the eastern districts. Therefore, we should have our territory as one unit so that we may build the economic life and also ensure the security of the lives and properties of the Tamils. If that is not assured, there can be no settlement of the ethnic problem. We will make all efforts to achieve this objective through India's good offices.

**Q. *What are your future plans?***

**A.** I will go to Madras and stay there for a few days to assess the situation in my country. Of course, there's a certain element of risk involved in my returning. But it is my country and how long can I stay away form my land and my people?



"உண்மையாக இலங்கையில் ஒரு எதிர்க்கட்சி கூட
இல்லை அவைகள் சக்தியில்லாததாகிற்கு குறைக்கப்பட்டு
விட்டன"
அமிர்தலிங்கம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

# தமிழீழ சமதர்மக் குடியரசை நிறுவுவதொன்றே

> • *Did you organise any mass movements in the Eelam areas on the lines of the civil disobedience and satyagraha of the Indian independence movement ?*
>
> No. We did not have the time for that.

# எமக்கு தமிழினம் இட்டுள்ள கட்டளை!

## அதை மாற்றும் அதிகாரமோ எண்ணமோ யாருக்கும் இல்லை!

## தவறான பிரசாரங்களுக்கு தலைவர் அமிர்தலிங்கம் ஆப்பு!

ஐ.தே.க.விலுள்ள எதிர்ப்புசக்திகளை கட்டுப்படுத்தி

## 'தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணமுடியும்'

பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் 'அமிர்';
'இந்திராவின் தூதுவரின் யோசனையை ஏற்கவேண்டும்'

It is said that in 1981, Kattimani Jegan and Thangadurai were betrayed to the Sinhalese cops by persons reportedly close to TULF. They were recently murdered cruelly in the Welikade jail in late July 83 along with 51 others by the Sinhalese army.

According to sources close to Yogeshwaran (TULF MP) which have reached Madras, his house was burnt down in Madras in 81, during the riots after he was critical of Amirthalingam.

## "ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு முன்வைக்கப்படின் பிரிவினைக் கோரிக்கையை கைவிடக் கூட்டணி தயார்!"

The Tamil people from all over the island are being driven into ghettoes in the North and East by the Sinhalese mobs. Even there, they are being harassed, humiliated and killed by the Sinhala armed forces. The T.U.L.F. as through democratic and non-violent means, been trying to secure the freedom and fundamental rights of the oppressed Tamil nation. I assure Your Excellency that we will continue to strive through all non-violent means to liberate our people from this horrible oppression.

With regards,

Yours Sincerely,
A. AMIRTHALINGUM
*Leader of the Opposition*
*and*
*Secretary-General T.U.L.F.*